நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 6/2022

ரமேஷ் ..... புகார்தாரர்

/ எதிர் /

மயில்வாகனன் ..... எதிரி

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | புகார்தாரர்:<br>ரமேஷ் (59/2026),<br>த/பெ.சிவசாமி,<br>5 B/2, மயில் பவனம்,<br>K.M.S.Layout, 10-வது வார்டு,<br>போடிநாயக்கனூர்,<br>போடிநாயக்கனூர் தாலுகா,<br>தேனி மாவட்டம். | எதிரி:<br>மயில்வாகனன் (48/2026),<br>த/பெ.செல்லப்பா,<br>232/3A, சீனிவாசன் நகர்,<br>V.I.P.Golden City,<br>போடிநாயக்கனூர்,<br>போடிநாயக்கனூர் தாலுகா,<br>தேனி மாவட்டம். |

<table>
<tr><td>2.</td><td>எதிரியின் வயது</td><td colspan="3">48/2026.</td></tr>
<tr><td>3.</td><td>தந்தை/கணவர் பெயர்</td><td colspan="3">த/பெ.செல்லப்பா.</td></tr>
<tr><td>4.</td><td>மதம்</td><td colspan="3">இந்து.</td></tr>
<tr><td>5.</td><td>தொழில்</td><td colspan="3">வியாபாரம்.</td></tr>
<tr><td>6.</td><td>முகவரி</td><td colspan="3">232/3A, சீனிவாசன் நகர், V.I.P.Golden City, போடிநாயக்கனூர்.</td></tr>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td colspan="3">போடிநாயக்கனூர், தேனி.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td colspan="3">பொருந்தாது.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td colspan="3">--</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி சிறையில் இருந்த நாட்கள்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>12.</td><td>புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">20.01.2022.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="3">17.02.2022.</td></tr>
<tr><td>14.</td><td>அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="3">05.04.2022.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">16.06.2022.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="3">14.07.2022.</td></tr>
<tr><td rowspan="2">17.</td><td rowspan="2">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>14.07.2022 & 16.05.2025</td><td>04.08.2022, 04.03.2024 & 03.07.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="3">10.07.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">20.06.2023.</td></tr>
</table>

<table>
<tr><td rowspan="4">20.</td><td rowspan="4">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>02.12.2023</td><td>311 of Cr.P.C</td><td>6852/2023</td><td>Allowed</td></tr>
<tr><td>17.03.2025</td><td>311 of Cr.P.C</td><td>2385/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>30.06.2026</td><td>311 of Cr.P.C</td><td>1680/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">தண்டனை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்</td><td colspan="4">12.09.2022 முதல் 17.07.2023 வரை – எதிரி மீது பிணையில் செல்லா பிடிகட்டளை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் காலதாமதம் மற்றும் 12.09.2022 முதல் 17.07.2023 வரை எதிரி மீது பிணையில் செல்லா பிடிகட்டளை நிலுவையில் இருந்ததும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 17.02.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 17.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.சுப்பிரமணி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.காமராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 பிரிவுகள் 138, 141 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **<u>மனுவின் சுருக்கம்</u>**:

2.1). எதிரி, புகார்தாரருக்கு பாத்தியமான போடிநாயக்கனூர், தென்றல் நகர், கிழக்கு தெருவில் உள்ள வீட்டில் வாடகைதாரராக 2013-ஆம் வருடத்திலிருந்து 2021-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முடிய இருந்து வந்ததன் மூலம் புகார்தாரருக்கு பழக்கம் என்றும், மேற்படி பழக்கத்தின் அடிப்படையில், எதிரி Real Estate தொழில் செய்வதற்கு பணம் தேவைப்படுகிறது என்று புகார்தாரரிடம் கேட்டதில், புகார்தாரரும் கடந்த 20.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-த்தை ரொக்கமாகவும், 21.10.2020-ஆம் தேதி ரூ.50,000/-மும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 23.10.2020-ஆம் தேதி ரூ.1,50,000/-மும் புகார்தாரர் வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, போடிநாயக்கனூர் கிளை, அக்கவுண்ட் எண்.257401000004682 மூலம், எதிரி சிட்டி யூனியன் வங்கி, போடிநாயக்கனூர் கிளை, அக்கவுண்ட் எண்.510909010048249-க்கு NEFT மூலம் அனுப்பியதாகவும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-ம் ரொக்கமாகவும், 29.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-ம் ரொக்கமாகவும், 07.11.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-ம் ரொக்கமாகவும், ஆகமொத்தம் ரூ.12,00,000/-த்தை எதிரி, புகார்தாரரிடம் பெற்றுள்ளதாகவும், புகார்தாரரின் மாமியார் சேதுபார்வதி வங்கியான கரூர் வைஸ்யா வங்கி, போடிநாயக்கனூர் கிளை, அக்கவுண்ட் எண்.1115155000036380 மூலம் எதிரி சிட்டி யூனியன் வங்கி, போடிநாயக்கனூர் கிளை, அக்கவுண்ட் எண்.510909010048249-க்கு NEFT மூலம் 21.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 23.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும்,

23.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 06.11.2020-ஆம் தேதி ரூ.1,93,180/-ம், 07.11.2020-ஆம் தேதி ரூ.88,000/-மும், ஆக மொத்தம் ரூ.10,81,180/-ம் அனுப்பியதாகவும், எதிரி, புகார்தாரரிடமும், புகார்தாரரின் மாமியார் சேதுபார்வதியிடமும் கடனாகப் பெற்றுக்கொண்ட மொத்த தொகை ரூ.22,81,180/-க்கு ஆதரவாக ரூ.22,81,180/-க்கான 08.11.2021-ஆம் தேதியிட்ட கோவில்பட்டி கிளை, HDFC BANK, காசோலை எண்.000011-ஐ SB A/C NO.591099949944091-ஐ எதிரி கையெழுத்து செய்து, புகார்தாரர் பெயருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை புகார்தாரார் தன்னுடைய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, போடிநாயக்கனூர் கிளையில், தன்னுடைய SB A/C NO.257401000004682-மூலம் 02.12.2021-ஆம் தேதி கலெக்சனுக்கு போட்டதில், மேற்படி காசோலை "Funds Insufficient" என்று 03.12.2021-ஆம் தேதி return செய்யப்பட்டு, மேற்படி விபரம் அடங்கிய Return memo இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, போடிநாயக்கனூர் கிளை மூலம் 03.12.2021-ஆம் தேதி புகார்தாரருக்கு வழங்கப்பட்டதாகவும், புகார்தாரர் இது சம்பந்தமாக 08.12.2021-ஆம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை எதிரியா 09.12.2021-ஆம் தேதி பெற்றுக்கொண்டு, எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல், மாற்றுமுறை ஆவணச்சட்டத்தில் குறிப்பிட்ட கால அவகாசத்திற்கு பிறகு காசோலைத் தொகையும் கொடுக்காமல், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற விபரம் தெரிந்து கொண்டே புகார்தாரருக்கு இக்காசோலையை வழங்கி ஏமாற்றியுள்ளார் என்றும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது

மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 16.06.2022-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). **<u>புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் ரமேஷ் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து 20.06.2023-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், வழக்கினைப் பற்றி எதுவும் இல்லை, பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். பின்னர், போதிய வாய்ப்பளித்தும் எதிரி எந்த ஒரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ஆனால், எதிரி தரப்பில் ம.சா.1–ன் குறுக்கு விசாரணையின் மூலமாக எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும், எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் நமது உச்ச நீதிமன்றம் வழங்கிய **1).John K. Abraham Vs Simon C. Abraham & Another, 2).A.C. Narayanan Vs State of Maharashtra & Another, with Shri G. Kamalakar Vs. M/s Surana Securities Ltd. & Another,**

**3).M/s. Kumar Exports Vs M/s. Sharma Carpets, 4).Krishna Janardhan Bhat Vs. Dattatraya G. Hegde, 5).K. Subramani Vs. K. Damodara Naidu, 6).M/s. Indus Airways Pvt. Ltd. & Others Vs. M/s. Magnum Aviation Pvt. Ltd, & Another, 7).Basalingappa Vs. Mudibasappa** மற்றும் **8).APS Forex Services Pvt. Ltd. Vs. Shakti International Fashion Linkers & Others** என்ற முன் தீர்ப்பு நெறிமுறைகளையும், நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய **1).V.Vijayalakshmi Vs. G. Sivagnanam** மற்றும் **2).G.E. Nelsan Nesakumar (Died), represented by his legal heirs Mrs. Irene Geetha & Others v. P. Gopalakrishnan** என்ற முன்தீர்ப்பு நெறிமுறைகளையும் மேற்கோள் காட்டி, மேற்படி முன்தீர்ப்புரைகளின் நகல்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8). **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.3 வழக்கு

காசோலையானது 08.11.2021-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 03.12.2021-ஆம் தேதியில் போதிய பணமில்லை என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பானது 08.12.2021-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 09.12.2021-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதையும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 20.01.2022-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 17.02.2022-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று

மட்டுமே கூறியுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கினைப் பற்றி எதுவும் இல்லை, பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). இந்த வழக்கில் புகார்தாரர் ரமேஷ் தனது குறுக்கு விசாரணையில், "**எதிரிக்கு நான் நேரடியாக எத்தனை முறை பணம் கொடுத்துள்ளேன் என்றால், 20.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 07.11.2020-ஆம் தேதி, ரூ.2,00,000/-மும் இரண்டு தடவை கொடுத்துள்ளேன். மற்ற பணத்தை எல்லாம் நான் எனது வங்கி மூலமாக கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். வட்டிக்கு கொடுத்தேனா? என்றால், கைமாற்றாக கொடுத்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, ரூ.4,00,000/-த்தை தவிர மீதமுள்ள பணம் அனைத்தையும் வங்கி பரிவர்த்தனை மூலமாகவே இந்த வழக்கின் எதிரிக்கு கொடுத்ததாகவும், அதுவும் கைமாற்றுக் கடனாகவே கொடுத்ததாகவும் ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

9.6). மேலும், இது குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் ரமேஷ் தனது குறுக்கு விசாரணையில், "**எதிரிக்கு நான் கடன் கொடுத்த விபரம் எங்கள் குடும்பத்தாருக்கு தெரியுமா? என்றால், என் மனைவி அம்சலட்சுமிக்கும், என் மாமியார் சேதுபார்வதிக்கும் தெரியும்**" என சாட்சியம் அளித்துள்ளார். எதிரிக்கு இரண்டு முறை தலா ரூ.2,00,000/-ம் வீதம் சுமார் ரூ.4,00,000/-ம் ரூபாயை பணமாக கொடுத்ததாகச் சொல்லியுள்ளார்.

9.7). மேலும், புகாரில் ம.சா.1 ரமேஷ் மேற்படி விபரம் தனது மனைவிக்கும், தனது மாமியாருக்கும் தெரியும் என குறிப்பிட்டு இருந்தாலும்கூட, மேற்படி நபர்கள் இருவரையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் புகார்தாரர் ரமேஷ் என்பவரிடம் இருந்தோ, அவரது மாமியார் சேதுபார்வதி என்பவரிடமிருந்தோ பணத்தை வாங்கவில்லை என்பது எதிரி தரப்பு வாதம் இல்லை என்பதால், அவர்களை விசாரிக்கவில்லை என்பது புகார்தாரர் தரப்பு வழக்கை பாதிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.8). மேலும், எதிரி தரப்பில் ம.சா.1 ரமேஷ் என்பவரது குறுக்கு விசாரணையில், "**எதிரியின் அம்மாவிற்கு அனுப்பிய அறிவிப்பில் எதிரியின் கடன் தொகைகள் சம்பந்தமாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எதிரியின் அம்மா பெயர் அன்னகாமு என்றால், சரிதான். எ.சா.ஆ.1-ல் ரூ.22,84,000/-த்திற்கு மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.275/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். எதிரியின் அம்மாவிற்கு கொடுத்த தொகை நிலுவையில் இருக்கும்போது எதிரிக்கு பணம் கொடுத்ததாகச் சொல்கிறேன் என்றால், எதிரியின் அம்மா தனிநபர், எதிரி தனிநபர், இருவரும் தனித்தனியாக கடன் வாங்கினார்கள்**" என

சாட்சியம் அளித்துள்ளார்.

9.9). எனவே, இந்த வழக்கின் புகார்தாரர் ரமேஷ் எதிரியின் அம்மா மீது மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும், அவருக்கும் தான் பணம் கொடுத்துள்ளதாகவும் சொல்லியுள்ளார். மேலும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், "**வங்கியில் உள்ள பணத்திற்கு வரி செலுத்தியுள்ளேன். 2020 - 2021, 2021 – 2022 நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா? என்றால், உள்ளேன்**" என சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, அவர் அந்த வருமான வரி கணக்கை தாக்கல் செய்யவில்லை என்பதாலேயே எதிரி, புகார்தாரரிடமிருந்து பெற்றதாகச் சொல்லும் கடன் தொகை நிரூபிக்கப்படவில்லை என்று கருத இயலாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.10). மேலும், எதிரி தரப்பில் புகார்தாரர் ரமேஷ் என்பவரது 04.03.2024-ஆம் தேதிய குறுக்கு விசாரணையில், "**எனது மனுவில் 21.10.2020-ஆம் தேதி ரூ.50,000/- பணத்தை NEFT மூலமாக மாற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், எ.சா.ஆ.1 எனது வங்கி கணக்கு அடங்கிய ஆவணத்தில் 23.10.2020-ஆம் தேதி ரூ.50,000/-ம் பணத்தை எதிரியின் வங்கி கணக்கிற்கு மாற்றியதாக உள்ளதா? என்றால், இல்லை, ஆனால், எதிரியின் வங்கிக் கணக்கு அடங்கிய பரிவர்த்தனைகளை பதிவிறக்கம் செய்தால் தெரியும். 22.10.2020-ஆம் தேதியன்று ரூ.2,00,000/-ம் பணத்தை எதிரியின் வங்கிக் கணக்கிற்கு மாற்றியதாக உள்ளதா? என்றால், இல்லை. பொன்மாடசாமி என்ற பெயரில் காசோலை தருமாறு சொல்லி எதிரி வாங்கிச் சென்றார். பொன்மாடசாமி என்பவருக்கு பணம் அனுப்பியதாக வழக்கறிஞர் அறிவிப்பில் கூறாமல் தற்போதுதான் கூறுகிறேன் என்றால், சரிதான். பொன்மாடசாமி எதிரிக்கு பணம் கொடுத்தாரா? இல்லையா? என்ற விபரத்தை எனது வழக்கில் கூறவில்லை என்றால், சரிதான். பொன்மாடசாமி யார் என்றால், எனக்கு தெரியாது. அவர் எதிரிக்குதான் தெரிந்தவர். பொன்மாடசாமிக்கும்,**

**எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எனக்கு வேண்டிய பொன்மாடசாமிக்கு நான் பணத்தை கொடுத்துவிட்டு அதை இந்த வழக்குடன் எதிரிக்கு கொடுத்ததாக தொடர்புபடுத்தி கூறுகிறேன் என்றால், சரியல்ல**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.11). கடந்த 22.10.2020-ஆம் தேதி, ரூ.2,00,000/-ம் பணம் எதிரிக்கு கொடுத்ததாக இல்லை என்பதாக எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கின் புகார்தாரர் ரமேஷ் என்பவரால் ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில், 22.10.2020-ஆம் தேதி மயில்வாகனன் என்பவருக்கு ரூ.2,00,000/-ம் கடனாக கொடுத்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மற்றொரு ரூ.2,00,000/-ம் பணத்தை தான் பொன்மாடசாமி என்பவருக்கு கொடுத்ததாகவும் உள்ளது. எனவே, எதிரியின் வங்கி கணக்கிற்கு 21.10.2020-ஆம் தேதியில் ரூ.50,000/–ம் பணமும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-ம் பணமும் போகவில்லை என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ம.சா.ஆ.9-ன் வாயிலாக மறுத்து, கடன் தொகை எதிரிக்கு சென்றுள்ளது என்ற விபரம் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.9-ன் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.12). மேலும், மேற்படி தொகை எதற்காக கொடுக்கப்பட்டது என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி தரப்பில் புகார்தாரர் ரமேஷ் என்பவரது குறுக்கு விசாரணையில், "**நானும், மயில்வாகனனும் சேர்ந்து ஜிஆர்டி நிறுவனத்திற்கு நிலம் வாங்குவதற்காக அக்ரீமெண்ட் போட்டுள்ளோம் என்றால், சரியல்ல. மேற்படி 275 ஏக்கர் மற்றும் பல ஏக்கர் வாங்குவதற்காக, எதிரிக்கு சிறுக சிறுக நிலம் வாங்குவதற்காக ரூ.26,00,000/-ம் கொடுத்த தொகை என்றால், சரியல்ல**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.13). இந்த வழக்கின் புகார்தாரரும், எதிரியும் சேர்ந்து ஜிஆர்டி என்ற

நிறுவனத்திற்கு நிலம் வாங்கி கொடுக்கும் வேலையை செய்து வந்ததாகவும், அதற்காகத்தான் சிறுக சிறுக எதிரிக்கு ரூ.26,00,000/-ம் ரூபாய் தொகை கொடுத்ததாகவும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில்கூட, அது புகார்தாரரால் இல்லை என மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

9.14). மேலும், இது குறித்து, எதிரி தரப்பில் எ.சா.ஆ.4 ஜிமெயில் அக்கவுண்டில் இருந்து பெறப்பட்டதாகச் சொல்லப்படும் இமெயில் விபரங்களை எ.சா.ஆ.4-வது சான்றாவனமாக தாக்கல் செய்துள்ளார். ஆனால், அது இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65B-ன் கீழான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் தாக்கல் செய்யப்பட்டு, அது குறித்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.15). இவ்வாறாக சாட்சிய சட்ட விதிகளை பின்பற்றாமல் தாக்கல் செய்த இமெயில் சம்பந்தமான விபரங்கள் மற்றும் அது சம்பந்தமான குறுக்கு விசாரணை ஏற்புடையதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், மேற்படி ஜிமெயில் எதிரி மயில்வாகனன் என்பவருடையது என்பதற்கும், மேற்படி மயில்வாகனன் என்பவரது ஜிமெயில் அக்கவுண்டுக்கு இந்த மெயில் எதிரி ரமேஷ் என்பவரால் அனுப்பப்பட்டது என்பதையும் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 65(B)-ன் கீழான சான்றிதழ் வழங்கப்படாமல், அதனை குறியீடு செய்த எதிரி தரப்பு ஆவணம் ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.16). மேலும், எ.சா.ஆ.5-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பொது அதிகார ஆவணம் கலர் ஜெராக்ஸ் ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 62-ன் கீழ் எ.சா.ஆ.5 கலர் ஜெராக்ஸ் ஆவணம் என்பதால், அது இரண்டாம்நிலை சாட்சியமாகவே கருதப்பட வேண்டும். மேலும், இரண்டாம்நிலை சாட்சியமாக ஒரு ஆவணத்தை முன்னிலைப்படுத்துவதற்கு முன்பு, மேற்படி ஆவணத்தின் அசல்

ஆவணம் என்ன ஆனது? அது யாரிடம் உள்ளது? ஏன் அந்த அசல் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை? என்பது குறித்த எவ்வித தகவலையும் முன்னிடாமல், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்த விபரம் மட்டுமே அந்த ஆவணத்தை ஏற்றுக் கொள்ளத்தக்க (admissible) ஆவணமாக தாக்கல் செய்ததாக கருத இயலாது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.17). இருப்பினும், புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில், மேற்படி ஆவணம் 2018-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது எனவும், ஆனால், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தொகை யாவும் 2020-ஆம் வருடம் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி ஆவணத்திற்கும் இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள பணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளதை எதிரி தரப்பு மறுக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.18). ஆனால், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில், **"எ.சா.ஆ.4-ற்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இந்த வழக்கில் கண்ட எதிரி மயில்வாகனன் என்பவருக்கு இந்தி தெரியாது. எனக்கு இந்தி பேச தெரியும் மற்றும் ஆங்கிலத்தில் எனக்கு சரளமாக பேசவும், எழுதவும் தெரியும். எதிரி மயில்வாகனனுக்கு ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பு கொள்ள தெரியாது. எனவே, மயில்வாகனன் எனது வீட்டில் வாடகைக்கு இருந்து வந்த பழக்கத்தில், எனது இமெயில் அக்கவுண்டில் இருந்து மேற்படி மயில்வாகனன் சம்பந்தப்பட்ட விஷயத்திற்கு மெசேஜ் அனுப்பவும், மேற்படி எதிரி மயில்வாகனன் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த ரபீக் என்பவரிடம் சில சொத்துக்களை கிரையம் செய்வது சம்பந்தமாக கிரைய அக்ரிமெண்ட் போட்டது சம்பந்தமாக இமெயிலில் கடந்த 24.03.2021-ஆம் தேதி மெசேஜ் அனுப்பி இருந்தார். அதன் விபரத்தைதான் 25.03.2019-**

ஆம் தேதி எதிரி மயில்வாகனனுக்கு பார்வார்டு செய்து அந்த விபரத்தை தெரிவித்தேன்" என குறிப்பிட்டுள்ளார்.

9.19). எனவே, எ.சா.ஆ.4 உரிய சட்ட முறையை பின்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும்கூட, மேற்படி மெயில் தனது மெயில் அக்கவுண்டில் இருந்துதான் சென்றது என்ற விபரம் புகார்தாரர் தரப்பு கூடுதல் நிரூபண வாக்குமூலத்தின் வாயிலாகவே நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.20). எனவே, நிலம் சம்பந்தமாக மகாராஷ்டிராவில் உள்ள நபருடன் இந்த புகார்தாரர் தொடர்பில் இருந்துள்ளார் என்பதையும், ரியல் எஸ்டேட் சம்பந்தமான தொழில் செய்து வந்துள்ளார் என்ற விபரமும் மேற்படி கூடுதல் நிரூபண வாக்குமூலத்தின் வாயிலாகவே அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர், எதிரியின் தொழில் தனக்கு தெரியாது என்றும், எதிரிக்கும் தனக்கும் ரியல் எஸ்டேட் தொழில் சம்பந்தமாக தொடர்பு இல்லை என குறிப்பிட்டுள்ள விபரம் உண்மையல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.21). எனவே, எ.சா.ஆ.4 மற்றும் எ.சா.ஆ.5 ஆகிய ஆவணங்கள் சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் ஏற்புடையது இல்லை என்றாலும்கூட, அதில் உள்ள விபரங்களை புகார்தாரர் தரப்பு குறிப்பிட்டு கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளதால், ஒத்தேற்றுக் கொண்ட விபரம் நிரூபிக்க தேவையில்லை என்றும் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 58-ன் கீழ் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.22). மேலும், எதிரி தரப்பில் ம.சா.1 ரமேஷ் என்பவரது குறுக்கு விசாரணையில், "**என் மாமியாரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால்**, 75 **வயதாகி படுக்கையில் இருப்பதால் அவரால் நீதிமன்றத்திற்கு வர இயலாது**" என சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இது குறித்து எதிரி தரப்பில், "**மேற்படி என் மாமியாருக்கு எதிரி யார் என்று தெரியாது என்றும், கணக்கு காட்ட வேண்டும் என்பதற்காக அவரது வங்கி கணக்கு மூலம் பணப் பரிவர்த்தனை செய்வதாக காட்டுகிறேன் என்றால், சரியல்ல**" என குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.23). அதாவது, இந்த வழக்கின் எதிரியை அவரது மாமியாருக்கு யார் என்றே தெரியாது என்பதாக ம.சா.1 ரமேஷ் என்பவரை முதலாவதாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மீண்டும் 04.03.2024-ஆம் தேதி ம.சா.1 ரமேஷ் என்பவரை குறுக்கு விசாரணை செய்தபோது, "**எனது மாமியாருக்கும் இந்த வழக்கின் எதிரிக்கும் நடைபெற்ற வரவு, செலவுகள் வேறு தலைப்பு சம்பந்தப்பட்டது என்றும், அதற்காக எனது மாமியார் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், எதிரி சட்டப்படி சந்தித்துக் கொள்ள தயாராக உள்ளார் என்றும், அது குறித்து நான் வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால், சரியல்ல**" என குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.24). அதாவது, ம.சா.1 ரமேஷ் என்பவரின் முதலாவது குறுக்கு விசாரணையில், புகார்தாரரின் மாமியாருக்கு எதிரி யார் என்று தெரியாது என குறிப்பிட்டு சொல்லிவிட்டு, ம.சா.1 ரமேஷ் என்பவரின் இரண்டாவது குறுக்கு விசாரணையில், புகார்தாரரின் மாமியாருக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட வரவு, செலவு வேறு வகையானது என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதேயொழிய, அது எந்த வகையிலானது என்பது குறித்து எதிரி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்பது வழக்கிற்காக எதிரி தரப்பில் முன்னுக்குப் பின் முரணாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.25). எனவே, எதிரி இந்த வழக்கின் புகார்தாரரான ரமேஷ் என்பவரிடமிருந்து அவரது வங்கிக் கணக்கின் வாயிலாகவும், ரொக்கமாகவும், அவரது மாமியாரின் வங்கிக் கணக்கின் வாயிலாகவும் பணத்தை வாங்கிக் கொண்டுள்ளார் என்ற விபரம் புகார்தாரர் தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் இந்த வழக்கின் புகார்தாரர் ரமேஷ் என்பவருக்கு ஆதரவாக உள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதனை எதிரி தரப்பு மறுத்துரைக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.26). எதிரி, புகார்தாரரிடம் கடனாக ரூ.22,81,180/- பணத்தைப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள கோவில்பட்டி கிளை, HDFC Bank–ன் 000011 என்ற எண்ணுள்ள காசோலை ஒன்றை ரூ.22,81,180/- பணத்திற்கு 08.11.2021 என தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளதும், மேற்படி காசோலையைப் புகார்தாரரும் அவரது வங்கியில் 02.12.2021-ஆம் தேதி வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை “Funds Insufficient” என்ற காரணம் காட்டி 03.12.2021-ஆம் தேதி காசோலை திருப்பப்பட்டுள்ளதும், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதும் நிரூபணமாகிறது. எனவே, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கில் அனுமானிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், இவ்வழக்கு கடந்த 4 வருடங்களாக நிலுவையில் இருந்து வருவதாலும், அதனால் புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலுக்கு வழக்கு காசோலைத் தொகை கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.27). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலித்த வகையில், எதிரி மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரியை இந்நீதிமன்றம் குற்றவாளி என தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு தண்டனையாக ஒரு வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. காசோலைத் தொகையான ரூ.22,81,180/-ஐ இழப்பீட்டுத் தொகையாக கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் எதிரி, புகார்தாரருக்கு இந்த தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 431 மற்றும் உ/இ பிரிவு 64 இ.த.ச-ன் படி எதிரிக்கு 1 மாத காலம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

10.2). மேற்படி தண்டனை காலங்கள் முடிந்த பிறகும் எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 421-ன் படி புகார்தாரர் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

10.3). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஜூலை திங்கள் 30-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.30 18:34:06 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**<u>1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | திரு.ரமேஷ் | புகார்தாரர் |

**<u>2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | எதிரி, முறையீட்டாளரிடம் 20.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 21.10.2020-ஆம் தேதி ரூ.50,000/-மும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 23.10.2020-ஆம் தேதி ரூ.1,50,000/-ம் ஆகியவற்றை எதிரி ரொக்கமாகவும், NEFT மூலம் மற்றும் 22.10.2020, 29.10.2020, 07.11.2020 ஆகிய தேதிகளில் முறையீட்டாளர், எதிரிக்கு ரொக்கமாக பணம் தலா ரூ.2,00,000/- வீதம், மொத்தம் ரூ.12,00,000/- கொடுத்ததற்கு, தனது வங்கி கணக்கிலிருந்து பணம் எடுத்ததற்கான போடிநாயக்கனூர் கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அக்கவுண்ட் Summary கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு, வங்கி மேலாளர் கையெழுத்து செய்யப்பட்ட உண்மை நகல். | ம.சா.1 |
| 2. | ம.சா.ஆ.2 | எதிரி, முறையீட்டாளரின் மாமியாரான சேதுபார்வதியிடம் 21.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 22.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 23.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 23.10.2020-ஆம் தேதி ரூ.2,00,000/-மும், 06.11.2020-ஆம் தேதி ரூ.1,93,180/-ம், 07.11.2020-ஆம் தேதி ரூ.88,000/-ம் ஆகியவற்றை எதிரியின் வங்கிக்கு NEFT மூலம் அனுப்பிய மொத்த தொகை ரூ.10,81,180/-ஐ முறையீட்டாளரின் மாமியாரான சேதுபார்வதியின் வங்கியான போடிநாயக்கனூர் கிளை, கரூர் வைசியா வங்கியின் அக்கவுண்ட் Summary கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டு, வங்கி மேலாளர் கையெழுத்து செய்யப்பட்ட உண்மை நகல். | ம.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| 3. | ம.சா.ஆ.3 | 08.11.2021-ஆம் தேதியிட்ட, கோவில்பட்டி HDFC Bank Cheque No.000011 என்ற காசோலை அசல். | ம.சா.1 |
| 4. | ம.சா.ஆ.4 | 03.12.2021-ஆம் தேதி எதிரியின் காசோலை "Fund Insufficient" என வழங்கப்பட்ட வங்கி குறிப்பாணை உண்மை நகல். | ம.சா.1 |
| 5. | ம.சா.ஆ.5 | 08.12.2021-ஆம் தேதி முறையீட்டாளர், எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். | ம.சா.1 |
| 6. | ம.சா.ஆ.6 | 09.12.2021-ஆம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான track consignment கணினி பதிவிறக்க நகல். | ம.சா.1 |
| 7. | ம.சா.ஆ.7 | 13.12.2021-ஆம் தேதி எதிரி, முறையீட்டாளர் மீது போடி நகர் காவல்நிலையத்தில் ஒரு பொய்யான புகார் கொடுத்ததற்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல். | ம.சா.1 |
| 8. | ம.சா.ஆ.8 | 11.03.2022-ஆம் தேதி மேற்படி முதல் தகவல் அறிக்கையை Squash செய்ய வேண்டி முறையீட்டாளர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL MP (MD) No.4563/2022 in CRL OP (MD) NO.3285/2022 மனு செய்து, 11.03.2022-ஆம் தேதி நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து கொள்ள Stay உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு சான்றிட்ட நகல். | ம.சா.1 |
| 9. | ம.சா.ஆ.9 | 13.10.2020-ஆம் தேதி முதல் 07.11.2020-ஆம் தேதி வரையிலான புகார்தாரரின் வங்கிக் கணக்கு அறிக்கை அசல். | ம.சா.1 |

**<u>3). புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருள்களின் பட்டியல்</u>**: தாக்கல் இல்லை.

**<u>4). எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றுப்பொருட்களின் பட்டியல்</u>**: தாக்கல் இல்லை.

**<u>5). எதிரி தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.சா.ஆ.1 | அ.வ.எண்.275/2021 என்ற வழக்கின் பிராது சான்றிட்ட நகல். | ம.சா.1 |
| 2. | எ.சா.ஆ.2 | அ.வ.எண்.275/2021 என்ற வழக்கின் 16.10.2020-ஆம் தேதியிட்ட எதிரி தரப்பின் புரோநோட்டின் சான்றிட்ட நகல். | ம.சா.1 |
| 3. | எ.சா.ஆ.3 | அ.வ.எண்.275/2021 என்ற வழக்கின் 18.10.2020-ஆம் தேதியிட்ட எதிரி தரப்பின் புரோநோட்டின் சான்றிட்ட நகல். | ம.சா.1 |
| 4. | எ.சா.ஆ.4 | 21.03.2021-ஆம் தேதி நான், எனது மெயில் ஐடியில் இருந்து, எதிரிக்கு மெயில் அனுப்பியுள்ளேன். மேற்படி மெயில் அடங்கிய ஆவணம். | ம.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| 5. | எ.சா.ஆ.5 | 21.06.2018-ஆம் தேதியிட்ட ரோட்டரி முன்பு கையெழுத்து செய்த Power of Atorny ஆவணம். | ம.சா.1 |
| 6. | எ.சா.ஆ.6 | 08.12.2021-ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் பி.சுப்பிரமணி மற்றும் ஸ்வப்னா அவர்கள் அனுப்பிய அன்னகாமு என்பவருக்கு அனுப்பிய அறிவிப்பு அஞ்சலுறையுடன் கூடியது. | ம.சா.1 |

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.30 18:34:13 +0530

நீதித்துறை நடுவர்,

போடிநாயக்கனூர்.